செய்தி வெளியீடு எண் : 1295 நாள் : 27.08.2024

# விக்கிரவாண்டிதொகுதி
# புதிய எம்.எல்.ஏ. திரு.அன்னியூர் சிவா அவர்கள்

# விக்கிரவாண்டி வெட்டுக்காடு பகுதியில் வீடு இடிந்து தவித்த மூதாட்டி மாரிமுத்து அவர்களுக்கு தற்காலிக வீடு கட்டிக் கொடுத்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதிக்கு அண்மையில் நடைபெற்ற இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் நின்று பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றவர் திரு.அன்னியூர் சிவா,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னிலையில், அவருடைய நல்வாழ்த்துக்களுடன் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றது முதல் திரு.அன்னியூர் சிவா அவர்கள் விக்கிரவாண்டி தொகுதி மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்து வருகிறார்.

அண்மையில் விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட வெட்டுக்காடு என்னும் கிராமத்தைச் சேர்ந்த மூதாட்டி மாரிமுத்து என்பவர் வசித்து வந்த குடிசை வீடு இடிந்துவிட்டது. அந்த குடிசை வீட்டை சீரமைப்பதற்கு வழியின்றித் தவித்துவந்த மூதாட்டி மாரிமுத்து,

வறுமையுடன் போராடி வந்தார். அண்மையின் பெய்த மழையின்போது தங்குவதற்கு இடமின்றி அரசு கட்டிக்கொடுத்துள்ள பொது கழிவறையில் தங்கியிருந்ததாகக் கூறியுள்ளார். இந்தச் செய்தி, தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா அவர்களின் கவனத்திற்கு வந்துள்ளது. அதைத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர் திரு.அன்னியூர் சிவா, அந்த மூதாட்டியை நேரில் சந்தித்து, உங்களுக்கு வீடு கட்டித் தருகிறேன் என்று வாக்களித்துள்ளார். அந்த வாக்குறுதியின்படி, உடனடியாக அந்த மூதாட்டியார் தங்குவதற்கு ஏற்ப தற்காலிகமாக இரும்புத் தகட்டிலான வீடு ஒன்றை கட்டித் தந்துள்ளார்.

இடிந்துபோன வீட்டைக் கண்டு இடிந்த நெஞ்சத்துடன் தவித்துவந்த மூதாட்டி மாரிமுத்து அவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கட்டித்தந்த தற்காலிக வீடு கிடைத்ததும் அவர் ஆனந்தக் கண்ணீர் வடித்து வீடு கட்டித்தந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.அன்னியூர் சிவா அவர்களுக்கு தன்னுடைய நன்றியைத் தெரிவித்துள்ளார்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu